# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.708/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரவிந்திரன் | த-பெ | சுந்தரபாண்டி |
| ஊர்: | : | தேனி | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் வருசநாடு காவல் நிலையம் | மாவட்டம் | தேனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026

**எதிரி ஆஜர். சாட்சி தேனி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளிக்கிறார்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தேனியில் வசித்து வருசநாடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குன்றக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக 2016 ம் வருடம் பணியில் இருந்தபோது செட்டிநாடு சர்க்குல் நிலைய ஆய்வாளராக கூடுதல் பணியாற்றி வந்த நிலையில் நிலைய சார்பு ஆய்வாளர் சக்தி என்பவர் பதிவு செய்த வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சம்பவ இடம் சென்று 14.12.2016 அன்று இரவு 21.15 மணிக்கு சம்பவ இட சாட்சிகள் கருணாநிதி மற்றும் சேவுகபெருமாள் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 7. பார்வை மகஜர் அசாஆ 8**.

17.12.2016 அன்று காலை 10.00 மணிக்கு நான் மற்றும் சார்பு ஆய்வாளர் சக்திவேல் மற்றும் போலீசார் சகிதம் நேமத்தான்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் வழக்கு தொடர்பாக விசாரணை செய்தபோது அந்த வழியாக வந்த வழக்கின் எதிரிகளை பிடித்து விசாரணை செய்தபோது எவ்வித தூண்டுதலும் இன்றி தன்னிசையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முயன்றவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் நாகப்பன் மற்றும் செல்லப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலங்கள் முறையே அசாஆ 9 மற்றும் அசாஆ 10**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் 17.12.2016 அன்று 11.15 மணிக்கு மற்றும் 12.45 மணிக்கும்

வழக்கின் சொத்துகளை சாட்சிகள் நாகப்பன் மற்றும் செல்லப்பன் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அத்தாட்சி மகஜர்கள் முறையே அசாஆ 11 மற்றும் அசாஆ 12.** எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து படிவம் 95 வாயிலாக கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். **படிவம் 95 முறையே அசாஆ 13 மற்றும் அசாஆ 14. அதிலுள்ள வழக்கு சொத்துகள் முறையே சா.பொ1 முதல் சா.பொ 3 வரை** குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலானவர்களை விசாரணை செய்து 29.12.2016 அன்று விசாரணையை நிறைவு செய்து 387, 506(ii) இதசவின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

__குறுக்கு விசாரணை__

வழக்கின் முதல் விசாரணையை பதிவு செய்தது யார் என்றால் சார்பு ஆய்வாளர் சக்திவேல். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்ற பதிவு செய்தேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எவ்வாறு பதிவு செய்யப்பட்டது என்றால் மடிகணினி வாயிலான பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல கைது செய்த இடத்தில் வைத்து வாங்கப்பட்டது. புகாரில் சொல்லப்பட்டுள்ள எதிரியின் பெயரை தெரிந்து கொண்ட நபரை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரிகளை கட்டாயப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் எதிரிகள் குறித்து அடையாள அணிவகுப்பு நடத்தினோமா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் மீது இந்த வழக்கிற்கு முன்னால் வேறு சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.14 11:43:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.